புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **29 ஏப்ரல், 2022**

# பத்திரிகை செய்தி

மெய்நிகர் மருத்துவத் திறன் மேம்பாட்டுக் கூடத் தொடக்க விழா புதுச்சேரி, பிம்ஸ் மருத்துவமனையில் இன்று(29-04-2022) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தர ராஜன் விழாவில் கலந்து கொண்டு மெய்நிகர் ஆய்வுக் கூடத்தைத் தொடங்கி வைத்தார்.

புதுச்சேரி தொழில்நுட்பப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் மோகன் விழாவில் பங்கேற்றார். மருத்துவர்களும் மருத்துவ மாணவர்களும் நிறைந்திருந்த அரங்கில் உரையாற்றிய துணைநிலை ஆளுநர்,

- முதன்முதலாக மெய்நிகர் ஆய்வுக் கூடத்தை பயன்பாட்டுக் கொண்டு வந்திருக்கும் மூன்று மருத்துவர் இளைஞர்களைப் பாராட்டுகிறேன். வருங்காலத்தில் சில ஆண்டுகளுக்குப் பிறகு தேவைப்படும் தொழில்நுட்பத்தை இப்பொழுதே செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- புதுச்சேரியில் கொரோனா நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக ஒவ்வொரு வியாழக்கிழமையும் மருத்துவ நிபுணர்களின் கூட்டம் தொடர்ந்து 30 வாரங்கள் நடத்தப்பட்டது. அது தேசிய அளவில் பாராட்டைப் பெற்றது. தற்போது கொரோனாவைக் கட்டப்படுத்தியிருக்கிறோம். மற்ற மாநிலங்களில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையிலும் தொடர்ந்து கொரோனா இல்லாத துணைநிலை மாநிலமாக புதுச்சேரி இருந்து வருகிறது. அதற்காக மருத்துவர்களையும் பொதுமக்களையும் பாராட்டுகிறேன்.
- மருத்துவத்துறையில் தகவல் பரிமாற்றம் என்பது அவசியமானதாக இருக்கிறது. தொழில்நுட்பம் தான் மருத்துவ மாணவர்களுக்கு வருங்காலத்தில் மிகப்பெரிய வரமாக இருக்கும். இத்தகைய மெய்நிகர் ஆய்வுக்கூடம் பொருளாதார ரீதியாகவும் கைகொடுக்கும்.
- மருத்துவ மாணவர்கள் படிப்பது மட்டுமல்லாமல் ஆராய்ச்சியிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆராய்ச்சிகள் அதிகம் செய்யச் செய்ய மருத்துவ சிகிச்சை வேறு பரிணாமத்திற்கு வளரும்.
- தொழில்நுட்பத்தைப் கையாளுவதில் வல்லுநர் ஆகுங்கள் என்பார் பாரத பிரதமர். தொழில்நுட்பத்தை கற்றுக் கொண்டால் முழுமையாக சேவை செய்ய முடியும். நேரத்தை மிச்சப்படுத்த முடியும். ஒவ்வொரு நாளும் நம்மை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று இருப்பதைவிட நாளை கொஞ்சம் முன்னேறி இருக்கவேண்டும்.
- பலருக்குக் கிடைக்காத வாய்ப்பு மருத்தும் படிக்கும் மாணவர்களுக்கு கிடைத்திருக்கிறது. அதனால் விருப்பத்தோடு மகிழ்ச்சியாக படித்தால் ஆராய்ச்சித் திறன் அதிகரிக்கும். ஏதாவது ஒரு வகையில் சாதிக்க முடியும். போதும் என்று நினைத்துவிட்டால், வளர்ச்சி நின்று போய்விடும்.
- மாணவர்கள் மகிழ்ச்சியாக இருங்கள். மகிழ்ச்சியை விட்டுக் கொடுக்காதீர்கள். இந்த மகிழ்ச்சி எந்த வகையிலும் நம்மை பாதித்து விடக்கூடாது. வரைமுறையை மீறி விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். கட்டுப்பாட்டுடன் கூடிய மகிழ்ச்சி இருக்க வேண்டும்.

என்றார்.